விட்டன. இரண்டாம் நிலை வேலையும் நீர் தேக்கிவைக்கும் ரிசர்வாயர் வேலையும் முடிவுறும் நிலையில் உள்ளன. ஆகவே இந்த வேலைகள் தொடர்ந்து நடைபெற அரசு ஆவன செய்யும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தத் திட்டத்திற்காக அதிகமான பணம் செலவழிக்கப்பட்டாலும் பல குறைபாடுகள் இடையிலே வந்தன என்று பல குழுக்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றன. அந்தக் குறைபாடுகள் இல்லாமல் இந்த ஆண்டு பார்த்துக் கொள்ள ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைத்தான் முன்பு சொன்னேன்.

* 476. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கு இதுவரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை மாயூரம் குடிநீர் வழங்கு திட்டத்திற்காக 20.13 லட்ச ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே மாயூரம் நகரத்தில் குடி நீர் வழங்கும் திட்டத்தில் முதல் கட்ட வேலை பூர்த்தியாகியுள்ளது. அதில் முக்கியமாக நகரிலுள்ள மாப்படுகை, திரு இந்தளூர், சேந்தன்குடி பகுதிகளுக்கு இத் திட்டத்தில் இடம் இல்லை என்ற காரணத்தினால் அவைகளையும் சேர்த்துக் கொள்ளக் கோரி அரசுக்கு மாயூரம் நகராட்சி தீர்மானம் போட்டுக் கேட்டுக் கொண்டுள்ளது. அதை அரசு பரிசீலனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பரிசீலனை செய்து நீர்நிலைக்கு ஏற்றவாறு முடிவு எடுக்கும்.

அரசு மருத்துவ மனைகள்

* 477 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையிலுள்ள அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.